RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 141 | மே.27, 2025 செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## இந்தியாவில் அதிகரிக்கும் கரோனா: கடந்த வாரம் 257 ஆக இருந்த பாதிப்பு இந்த வாரம் 1,009 ஆக உயர்வு

புதுடெல்லி: மே.27-

இந்தியாவில் இன்றைய நிலவரப்படி (மே 26, 2025) மொத்தம் 1,009 பேர் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. மே 19 அன்று இந்த எண்ணிக்கை 257 ஆக இருந்தது. கேரளா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் கரோனா பாதிப்பு அதிகமாக உள்ளது.

சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ள தகவல்களின்படி, கோவிட் 19 மாறுபாடுகளான என்பி.1.8.1 (ழிஙி.1.8.1) மற்றும் எல்எப்.7 (லிதி.7) ஆகியவை சமீபத்தில் இந்தியாவில் கண்டறியப்பட்டன. ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாட்டில் என்பி.1.8.1 மாறுபாட்டால் ஒருவர் பாதிக்கப்பட்டார். அதே நேரத்தில் மே மாதத்தில் எல்எப்.7 மாறுபாட்டால் நான்கு பேர் பாதிக்கப்பட்டனர்.

உலக சுகாதார அமைப்பு எல்எப்.7மற்றும் என்பி.1.8.1 துணை மாறுபாடுகளை கண்காணிப்பின் கீழ் உள்ள மாறுபாடுகள் (VUMs) என வகைப்படுத்தியுள்ளது. இவை கவலைக்குரிய மாறுபாடுகள் (VOCs) அல்லது கவனத்துக்குரிய மாறுபாடுகள் (VOIs) அல்ல என தெரிவித்துள்ளன.



சீனா மற்றும் ஆசியாவின் பிற பகுதிகளில் கோவிட் 19 பாதிப்பு சமீபத்தில் அதிகரிப்பதற்கு இந்த மாறுபாடுகள் தான் காரணம் என்று கூறப்படுகிறது.

கடந்த வார இறுதியில் சுகாதார அமைச்சகம் கரோனா பாதிப்புகளை மதிப்பாய்வு செய்து, முக்கியமாக கேரளா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருந்து பாதிப்பு அதிகம் பதிவாகியுள்ளதாகக் கூறியது. தற்போது இந்தியா முழுவதும் 1,009 பேர் கரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதில் 430 பேர் கேரளாவைச் சேர்ந்தவர்கள். கேரளாவில் மே 19 முதல் 335 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மகாராஷ்டிராவில் தற்போது 209 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 153 பேர் கடந்த வாரம் முதல் பாதிக்கப்பட்டுள்ளனர். மகாராஷ்டிராவில் கடந்த வாரத்தில் நான்கு பேர் கரோனா பாதிப்பால் உயிரிழந்தனர். டெல்லியில் தற்போது பாதிப்பு 104 ஆக உயர்ந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக, கடந்த வாரத்தில் 752 பேர் புதிதாக கரோனா பாதிப்புக் குள்ளாகியுள்ளனர், ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். அதே நேரத்தில் 305 பேர் குணமடைந்துள்ளனர். "முன்னர் பரவிய மாறுபாடுகளுடன் ஒப்பிடும்போது, தற்போது பரவும் மாறுபாடுகள் அதிகமாக பரவக்கூடியவை அல்லது கடுமையான நோயை ஏற்படுத்துகின்றன என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. மத்திய சுகாதார அமைச்சகம் விழிப்புடன் உள்ளது, தற்போதைய நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது" என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும்

## பிரதமர் மோடி வேண்டுகோள்

சென்னை, மே.27-

ஆபரேஷன் சிந்தூரால் இந்தியர்களின் தலைநிமிர்ந்தது. தீவிரவாதத்துக்கு எதிரான போரில் புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை மனதின் குரல் வானொலி நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களிடையே பிரதமர் உரையாற்றி வருகிறார். இதன்படி 122வது மனதின் குரல் நேற்று ஒலிபரப்பானது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

ஆபரேஷன் சிந்தூரின்போது நமது எல்லைக்கு அப்பால் உள்ள தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன. இந்த ராணுவ நடவடிக்கையால் இந்தியர்களின் தலைநிமிர்ந்தது. நமது வீரர்களின் வீர, தீரத்தைப் பார்த்து ஒவ்வொரு இந்தியரும் பெருமிதம் அடைந்தனர். இப்போது தீவிரவாதத்துக்கு எதிரான போரில் புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது. ஒட்டுமொத்த நாடும் தீவிரவாதத்துக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்கிறது.

ஆபரேஷன் சிந்தூர் என்பது ராணுவ நடவடிக்கை மட்டுமல்ல. இது நமது நாட்டின் உறுதிப்பாடு ஆகும். நமது நாட்டின் முகம் மாறி வருகிறது என்பதை உலகத்துக்கு தெளிவுப்படுத்தி உள்ளோம். ராணுவத்துக்கு ஆதரவாக நாடு முழுவதும் அனைத்து நகரங்கள், கிராமங்களில் தேசிய கொடி ஏந்தி பேரணிகள் நடைபெற்று வருகின்றன. ஆபரேஷன் சிந்தூரை பாராட்டி சமூக ஊடகங்களில் கவிதைகள், புதிய பாடல்கள் வெளியாகி வருகின்றன.

சில நாட்களுக்கு முன்பாக ராஜஸ்தானின் பிகானீர் சென்றிருந்தேன். அங்கே ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக குழந்தைகள் வரைந்த ஓவியம் எனக்கு பரிசாக வழங்கப்பட்டது. பிஹாரின் கடிஹார், உத்தர பிரதேசத்தின் குஷிநகரில் பிறந்த குழந்தைகளுக்கு சிந்தூர் என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது.

உள்ளூர் பொருட்கள்: ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள், தொழில்நுட்பங்கள் மிக முக்கிய பங்கு வகித்தன. இந்த நேரத்தில் நாட்டு மக்களுக்கு ஓர் அழைப்பு விடுக்கிறேன். உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும். இதன்மூலமே நமது தேசப்பக்தியை வெளிப்படுத்த வேண்டும். உள்நாட்டு தயாரிப்புகளை வாங்குவதால் நமது நாட்டின் பொருளாதாரம் வலுவடையும்.

சத்தீஸ்கரின் தந்தேவாடாவில் ஒரு காலத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதம் கொடி கட்டி பறந்தது. தற்போது அங்கே கல்வி கொடி கட்டிப் பறக்கிறது. அந்த பகுதி மாணவ, மாணவியர் கல்வியில் சாதனை படைத்து வருகின்றனர். மகாராஷ்டிராவின் கட்ச்ரோலி மாவட்டம், கடேஜ்ஹரி கிராமம் மாவோயிஸ்ட் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டு இருந்தது. தற்போது அங்கு தீவிரவாதம் வேரறுக்கப்பட்டு முழு அமைதி திரும்பி உள்ளது. முதல்முறையாக அந்த கிராமத்துக்கு அண்மையில் பயணிகள் பேருந்து இயக்கப்பட்டது. இதை ஒட்டுமொத்த கிராம மக்களும் மிகப்பெரிய விழாவாக கொண்டாடினர்.

சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு: குஜராத்தின் கிர் பகுதியில் உள்ள 11 மாவட்டங்களில் 35,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் சிங்கங்களின் எண்ணிக்கை குறித்து விரிவான ஆய்வு செய்யப்பட்டது இதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு குழுக்கள் 24 மணி நேரமும் இந்த பகுதிகளை தொடர்ந்து கண்காணித்தனர். மிகவும் நுட்பமான முறையில் சிங்கங்களைக் கணக்கெடுக்கும் பணி நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்பு மூலம் கடந்த 5 ஆண்டுகளில் குஜராத்தின் கிர் வனப் பகுதியில் சிங்கங்களின் எண்ணிக்கை 674ல் இருந்து 891 ஆக அதிகரித்து இருப்பது தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் பல்வேறு கிராமங்களை சேர்ந்த பெண்கள், ட்ரோன்கள் மூலம் விவசாயத்தில் புதிய புரட்சியை ஏற்படுத்தி வருகின்றனர். குறிப்பாக தெலங்கானாவின் சங்காரெட்டி மாவட்டத்தை சேர்ந்த பெண்கள் ட்ரோன்கள் வாயிலாக 50 ஏக்கர் நிலத்தில் பயிர்கள் மீது மருந்து தெளிக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். அந்த பெண்களை பாராட்டுகிறேன்.

கடந்த 2015ம் ஆண்டு முதல் ஜூன் 21ம் தேதியை சர்வதேச யோகா தினமாக கொண்டாடி வருகிறோம். நீங்கள் இதுவரை யோகாவை கற்கவில்லை என்றால் இப்போதே யோகாவோடு இணையுங்கள். இது உங்கள் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துவிடும்.

ஆந்திர அரசு சார்பில் யோகாந்திரா என்ற இயக்கம் தொடங்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் ஆந்திரா முழுவதும் யோகாவை கொண்டு செல்ல திட்டமிடப்பட்டு உள்ளது. பல்வேறு நிறுவனங்கள், அமைப்புகள் தங்கள் அலுவலகங்களிலேயே யோகாசனம் மேற்கொள்ள இடம் ஒதுக்கி உள்ளன. இதன்மூலம் ஊழியர்களின் உடல்நலனும் மனநலனும் பேணப்படும்.

கடந்த 24ம் தேதி உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் முன்னிலையில் ஆயுர்வேதம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன்மூலம் ஒட்டுமொத்த உலகத்துக்கும் ஆயுர்வேதம் கொண்டு செல்லப்படும்.

பள்ளிகளில் சர்க்கரை தகவல் பலகை: சிபிஎஸ்இ சார்பில் புதிய விழிப்புணர்வு இயக்கம் தொடங்கப்பட்டு உள்ளது. இதன்படி சிபிஎஸ்இ பள்ளிகளில் சர்க்கரை தகவல் பலகை அமைக்கப்பட்டு இருக்கிறது. இதன்மூலம் எவ்வளவு சர்க்கரையை சாப்பிடலாம் என்பது குறித்து குழந்தைகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

சிறுவயது முதலே ஆரோக்கியமான வாழ்க்கை முறை, பழக்கங்களை பின்பற்றுவது எதிர்காலத்துக்கு பயனுடையதாக இருக்கும். சிபிஎஸ்இயின் புதிய இயக்கத்தை பெற்றோர், சமூக ஆர்வலர்கள் பாராட்டி உள்ளனர்.

இதேபோல அலுவலகங்கள், அமைப்புகள், ஓட்டல்களில் சர்க்கரை உட்கொள்ளல் அளவு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இது ஆரோக்கியமான இந்தியாவுக்கு அடித்தளமிடும்.

இந்த முறை கேலோ இண்டியா போட்டியில் பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டன. பளுதூக்கும் போட்டியில் மகாராஷ்டிராவின் அஸ்மிதா தோனே, ஒடிசாவின் ஹர்ஷ்வர்தன் சாஹு, உத்தர பிரதேசத்தின் துஷார் சவுத்ரி புதிய சாதனை படைத்தனர்.

தடகள போட்டிகளில் உத்தர பிரதேசத்தின் காதிர் கான், ஷேக் ஜீஷான் ஆகியோரும், ராஜஸ்தானத்தின் ஹன்ஸ்ராஜும் சிறப்பாக செயல்பட்டனர். இந்த முறை பிஹார் 36 பதக்கங்களை வென்றது.

கடந்த 20ம் தேதி உலக தேனீக்கள் தினத்தை கொண்டாடினோம். கடந்த 11 ஆண்டுகளில் தேன் உற்பத்தியில் புதிய இனிமை புரட்சியை ஏற்படுத்தி உள்ளோம். கடந்த 2014ம் ஆண்டுக்கு முன்பு ஓராண்டு தேன் உற்பத்தி 75 ஆயிரம் மெட்ரிக் டன்களாக இருந்தது. இப்போது ஒண்ணேகால் லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. தேனீக்கள் பாதுகாப்பு என்பது சுற்றுச்சூழலோடு தொடர்புடையது மட்டுமல்ல, நமது வேளாண்மைக்கும் முக்கியமானது. இயற்கையோடு இணைந்திருந்தால் அனைவருக்கும் நன்மை கிடைக்கும். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

## மானாமதுரை - செய்களத்தூர் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைச்சர் பெரியகருப்பன் குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்து, வகுப்பறை மற்றும் அலுவலக கட்டிடங்களை பார்வையிட்டார்

மானாமதுரை மே.27

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதிக்குட்பட்ட செய்களத்தூர் காமாட்சியம்மன் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி ரவிக்குமார் (மானாமதுரை), எஸ்.மாங்குடி (காரைக்குடி) ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்து, வகுப்பறை மற்றும் அலுவலக கட்டிடங்களை பார்வையிட்டு தெரிவிக்கையில்,





தமிழ்நாடு முதலமைச்சர் நல்லாட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளில் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக தமிழகம் திகழ்ந்து வருகிறது.

அதில் குறிப்பாக, கல்வி மற்றும் சுகாதாரத்தினை தனது இரு கண்களாக கொண்டு, அதற்கென அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து, சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

நடப்பு நிதியாண்டில் பள்ளிக்கல்விக்கென ரூ.49 ஆயிரம் கோடியும், உயர்கல்விக்கென ரூ.09 ஆயிரம் கோடியும் என மொத்தம் ரூ.58 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்துள்ளது குறிப்பிடதக்கதாகும். இந்திய அளவில் உயர்கல்வி கற்பதில் தமிழகம் 52 சதவீதம் பெற்று சிறந்து விளங்கி வருகிறது. அதற்கு அடிப்படையாக, தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ் புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம் போன்ற திட்டங்கள் சிறந்து விளங்கி வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சட்டப்பேரவை அறிவிப்பிற்கிணங்க மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது, நேற்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் திருக்கரங்களால் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது பெருமைக்குரிய ஒன்றாகும்.

இதேபோன்று, உயர்கல்வித்துறையின் சார்பில் 10 மாவட்டங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை இன்றையதினம் திறந்து வைத்து சிறப்பித்துள்ளார்கள். இதன் வாயிலாக சொன்னதை செய்யும் முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்கள். இத்திட்டம் மட்டுமன்றி, தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்திற்கும் செயல் வடிவம் அளித்திடும் வகையில், அனைத்து திட்டப்பயன்களும் பொதுமக்களுக்கு சென்றடைந்து வருவது குறிப்பிடதக்கதாகும்.

அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் புதிய திட்டப்பணிகள் நிறைவுற்று அவை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டு வருகிறது. மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் முனைப்புடன் செயல்பட்டு, அரசின் திட்டங்களின் கீழ் புதிய பணிகளை நடைமுறை படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

சிவகங்கை மாவட்டம் முழுவதும் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் தொடர்ந்து, பல்வேறு பணிகள் நடைபெற்று வருவது, மாவட்டத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாகவும், சான்றாகவும் அமைகிறது.

இன்றையதினம் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் உயர்கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையில் தற்காலிக கட்டிடத்தில் தொடங்கப்பட்டுள்ள இக்கல்லூரியில் சேர்வதற்கென 3,167 விண்ணப்பங்கள் தற்சமயம் வரை பெறப்பட்டுள்ளது. மாணாக்கர் சேர்க்கைக்கென இன்றையதினம் (27.05.2025) வரை விண்ணப்பிக்கலாம். இக்கல்லூரியில் B.A., Political Science , B.A., Economics, B.A., History, B.Sc., Computer Science, B.Com (General) என 5 பாடப்பிரிவுகள் உள்ளன. இக்கல்லூரியில் மாணாக்கர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் மேம்படுத்தி தரப்படும். இன்னும் கூடுதல் வசதிகள் தேவைப்படின் அதனையும் மேம்படுத்தி தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதுபோன்று, பல்வேறு புதிய திட்டங்கள் தமிழ்நாடு முதலமைச்சரால் தொலைநோக்கு சிந்தனையுடன் செயல்படுத்தப்பட்டு, பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான முதலமைச்சராகவும் முதன்மையான முதலமைச்சராகவும், தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்ந்து வருகிறார் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், மானாமதுரை நகர்மன்றத்தலைவர் மாரியப்பன் கென்னடி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் கோவிந்தன், மானாமதுரை வட்டாட்சியர் கிருஷ்ணகுமார் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாவட்டம் ஆட்சியர் அலுவலகம் முன்பு பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக செல்லம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலரை கண்டித்து முற்றுகை போராட்டம்

மதுரை, மே.27-

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மதுரை தெற்கு மாவட்ட பாமக தலைவர் முருகன் தலைமையில் செல்லம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் பணி யிடை நீக்கம் செய்யக் கோரியும் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரியின் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டு மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 29 கிராம ஊராட்சிகளில் 29 செயலாளர்கள் உள்ளனர். 15 வருடங்கள் முதல் 25 ஆண்டுகள் வரை ஒரே ஊராட்சியில் பணிபுரிந்து வரும் இவர்கள் தமிழ்நாடு கிராமபுற ஊராட்சிகளின் இயக்குநர் பொன்னையா உத்தரவுகளின் பெயரில்




தமிழ்நாடு முழுவதும் உள்ள ஊராட்சி செயலாளர்கள் அவர்களை கலந்தாய்வு நடத்தி பணிமாறுதல் செய்தனர்.

இந்நிலையில் மூன்று மாத காலத்திற்குள் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கருமாத்தூர் ஊராட்சி மன்றத்தில் இதற்கு முன்பு 15 ஆண்டுகள் பணிபுரிந்த செயாலரை அதே ஊராட்சியில் மீண்டும் பணி அமர்த்தி உள்ளார்கள். இது அரசு விதிகளுக்கு மாறாக உள்ளது.மேலும் முறைகேடுகள் நடக்க வாய்ப்பு உள்ளதாகவும் எனவே மாவட்ட ஆட்சியர் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் மேலும் 100 நாள் வேலை திட்டத்திலும் பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பதாகவும் மீண்டும் பணி மாறுதலுக்கு உடந்தையாக இருந்த செல்லம்பட்டி வட்டார வளர்சி அலுவலர் தங்க பாண்டி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மனு அளித்தனர் இந்நிகழ்சியல் தெற்கு மாவட்ட செயலா ளர் கிட்டு, செல்லம்பட்டி ஒன்றிய செயலாளர் ஈஸ்வரன், அலங்கா நல்லூர் ஒன்றிய தலைவர் விஜி, கிழக்கு மாவட்ட தலைவர் சேகர், அமைப்புச் செயலாளர் ராஜாராம், கிளை பொருளாளர் ராஜ்கு மார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



■ தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை நேற்று திறந்து வைத்தார். அவ்வகையில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கல்லூரியை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார் . அதனைத் தொடர்ந்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி முன்னிலையில் நடைபெற்றது. தமிழக கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கை மாறன் ,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் சுப.மதியரசன், மானாமதுரை கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை.ராஜாமணி மேற்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, வடக்கு ஒன்றிய செயலாளர் முத்துச்சாமி, நகர செயலாளர் பொன்னுசாமி, மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, துணை தலைவர் பாலசுந்தரம், இளையான்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் தமிழ் மாறன் மேற்கு ஒன்றிய செயலாளர் வெங்கட்ராமன் தெற்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜன் பேரூர் செயலாளர் நஜுமுதீன் திருப்புவனம் ஒன்றிய செயலாளர் கடம்பசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# சிவகங்கை:மருத்துவக்கல்லூரி கட்டிட கட்டுமான பணியில் குறைபாடு கடிந்து கொண்ட அமைச்சர்: ஒப்பந்ததாரருக்கு நோட்டீஸ்

சிவகங்கை, மே.27-

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பொதுப்பணி துறையின் சார்பில் கட்டப்பட்டு வரும் இரு கட்டிடங்களை பொதுப்பணித்துறை அமைச்சர் ஏ.வா. வேலு, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரியகருப்பன் ஆகியோர் மே21 அன்று ஆய்வு மேற்கொண்டனர் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 20 கோடி மதிப்பீட்டில் 28 ஆயிரம் சதுர அடியில் ஒரு கட்டிடமும் கூடுதலாக 10 கோடி மதிப்பீட்டில் இரண்டாவது கட்டிடமும் கட்ட ஈரோட்டைச் சேர்ந்த கொங்கு கன்ஸ்ட் ரக்சன் என்ற கட்டுமான நிறுவனம் (20/3/2023) ஒப்பந்தம் போடப்பட்டு கட்டுமானப் பணிகளை இரண்டு ஆண்டுகளாக கட்டி வருகின்றனர் .அவசர சிகிச்சை பிரிவு, மருந்தகம் ,ஆய்வகம், தீவிர சிகிச்சை பிரிவு, என பல்வேறு அறைகள் கட்டப்படுகிறது.இந்த மாதம் (31/5 /25) க்குள் கட்டி முடிக்க வேண்டும். பல்வேறு நிகழ்ச்சிகள் கலந்து கொள்ள வந்த அமைச்சர் பெருமக்கள் கட்டுமான பணிகள் தரமாக நடக்கிறதா என்று அமைச்சர் ஏ.வா. வேலு ஆய்வு மேற்கொண்ட போது கட்டுமான பணிகளில் பல்வேறு குறைகள் இருந்ததை கண்டறிந்து சுட்டிகாட்டி ஒப்பந்ததாரரை அழைத்து கடிந்து கொண்டார்! மருத்துவக் கல்லூரியின் முகப்புத்தோற்றத்தையும் சுட்டிக்காட்டி தமிழகத்தில் ஆம்பூர் திருப்பத்தூர் குடியாத்தம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை சுட்டிக்காட்டி அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினர் மேலும் ஒப்பந்ததாரர் மீது நோட்டீஸ் அனுப்ப அமைச்சர் ஏ.வ.வேலு உத்தரவிட்டார். தொடர்ந்து, ”அரசு கட்டிடம், சாலை உள்ளிட்டவைகளில் கட்டுமான பணிகளில் தர குறைபாடு முறைகேடு இருந்தால் எந்த சமரச பேச்சுக்கும் இடமில்லை; ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்” என அமைச்சர் எ.வ.வேலு அங்கிருந்த அதிகாரி களுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

# 15வது வார்டு காளியம்மன் கோவில் மண்டபத்தில் இரண்டாம் ஆண்டு கல்வி பரிசளிப்பு விழா

தேனி, மே.27-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் 15வது பகுதி காளியம்மன் கோவில் மண்டபத்தில் 10 மற்றும் 12ம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற மற்றும் அதிக மதிப்பெண் பெற்றவர் களுக்கு பரிசளிப்பு மற்றும் பாராட்டுவிழா இரண்டாம் ஆண்டு விழா நிகழ்ச்சியாக ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு மேல் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் காவல்துறை உயர் அதிகாரி எஸ். பிரபாகரன், ஸ்பைசஸ் போர்டு எஸ். ராஜேந்திரன், போடி நகர் காவல் ஆய்வாளர் சுப்புலட்சுமி, சார்பு ஆய்வாளர் கிருஷ்ணவேணி ஆகியோர்கள் கலந்து



கொண்டு அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளையும் ஊக்கத் தொகையும் வழங்கினர். இவ்விழாவினை ஏற்பாடு செய்த 15 வது வார்டு பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் மற்றும் இளைஞர்களும் நூற்றுக்கும் மேற்பட்டோர்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்டஆட்சித்தலைவர் .மா.சௌ.சங்கீதா பெற்றுக் கொண்டார்.



# கல்வி பரிசளிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தேனி, மே.27-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் காந்திநகர் திருமலாபுரம் தெற்கு தெரு 24மனை தெலுங்கு செட்டியார் உறவின்முறைக்கு கல்வி பரிசளிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மேல் J.K.பட்டி திருமலாபுரம் காமாட்சி அம்மன் கோவில் வளாகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சி திண்டுக்கல் ஆர். நடராஜன் (24 மனை தெலுங்கு செட்டியார் தலைமைச் சங்கம் Ex.சேர்மன் திண்டுக்கல் மாநகராட்சி ) தலைமையில் நடைபெற்றது. 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவி தொகையும் பெற்றோர்களுக்கு வேஷ்டி சேலையும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்விழாவில் வெங்கடாசலம் தேனி மாவட்ட தலைவர், முருகேசன் மாவட்ட செயலாளர், செல்லப்பாண்டி மாவட்ட பொருளாளர், ரமேஷ்குமார் கவுன்சிலர் மாவட்ட மாணவரணி தலைவர் , நாகேந்திர பாண்டியன் மாவட்ட கல்வி மேம்பாட்டுகுழு தலைவர், மணிமாறன் மாவட்ட இளைஞர் அணி தலைவர் மற்றும் 24 மணி தெலுங்கு செட்டியார்கள் உறவின்முறை போடி நகர் நிர்வாகிகளும் உறுப்பினர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.

# விளையாட்டு திடலை மதிப்பு கூட்டு மையமாக மாற்ற தடை

கடலூர், மே.27-

விளையாட்டுத் திடலை பலாப்பழ மதிப்பு கூட்டு மையமாக மாற்ற இடைக்காலத் தடை விதித்தது ஐகோர்ட். கடலூரில் 200 ஆண்டு பழமையான விளையாட்டுத் திடலை மாற்றம் செய்வதை எதிர்த்து ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவுக்கு கடலூர் ஆட்சியர், மாவட்ட வேளாண் உதவி இயக்குநர் உள்ளிட்டோர் பதில்தர உத்தரவிட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.



■ சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், சிவகங்கை நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டத்திற்குட்பட்ட சாலைகளில் 2025-26ஆம் ஆண்டிற்கான போக்குவரத்து கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது.

# பாகிஸ்தானுக்கு 2015ல் கடைசி வாய்ப்பு அளிக்கப்பட்டது: அமெரிக்காவில் சசி தரூர் கருத்து

சென்னை, மே.27-

‘‘தீவிரவாத தாக்குதல் மீது நடவடிக்கை எடுக்க, பாகிஸ்தானுக்கு கடந்த 2015ல் இறுதி வாய்ப்பு அளிக்கப்பட்டது’’ என பதன்கோட் தாக்குதலை அமெரிக்காவில் இந்திய குழுவுக்கு தலைமை தாங்கிய காங்கிரஸ் எம்.பி சசிதரூர் நினைவுபடுத்தினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. இதில் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்கள் மற்றும் விமானப்படை தளங்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது. 4 நாட்களாக நடைபெற்ற போர் கடந்த 10ம் தேதி முடிவுக்கு வந்தது.

இதையடுத்து சர்வதேச தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுடன் தொடர்புடைய நாடுகளிடம் தெரிவிக்க அனைத்து கட்சிகளையும் சேர்ந்த எம்.பி.க்கள் குழுவை மத்திய அரசு அனுப்பியது.

காங்கிரஸ் எம்.பி. சசிதரூர் தலைமை யிலான குழு தற்போது அமெரிக்கா சென்று அங்குள்ள அரசு உயர் அதிகாரிகள், எம்.பி.க்கள், வெளியுறவு கொள்கை நிபுணர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களை சந்தித்து இந்தியாவின் நிலைப்பாட்டை தெரிவித்து வருகிறது.

அமெரிக்கா சென்ற இந்திய குழுவினர் நியூயார்க்கில் இரட்டை கோபுரம் தகர்க்கப்பட்ட செப்டம்பர் 11 தீவிரவாத தாக்குதல் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியது. அதன்பின் அவர்கள் இந்திய துணை தூதரகத்தில் நடந்த கூட்டத்தில் பங்கேற்றனர். அப்போது சிசிதரூர் பேசியதாவது:

தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டும், தீவிரவாதிகளுக்கு புகலிடம் அழிப்பதை பொறுத்துக் கொள்ள முடியாது என்ற இந்தியாவின் ஒருமித்த கருத்தை தெரி விப்பதற்காக நாங்கள் செப்டம்பர் 11 நினைவிடத்தில் இருந்து எங்கள் பயணத்தை தொடங்கியுள்ளோம்.

கடந்த 2015ம் ஆண்டு இந்தியாவின் பதன்கோட் விமானப்படை தளம் மீது தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டது. அதற்கு முதல் மாதத்தில்தான் எங்கள் பிரதமர் பாகிஸ்தானுக்கு திடீர் பயணம் மேற்கொண்டு அமைதிக் கரம் நீட்டினார். இந்த தாக்குதல் அவருக்கு அதிர்ச்சியை அளித்தது. இந்த தாக்குதல் குறித்த விசாரணையில் பாகிஸ்தான் இணைய வேண்டும் என பாக். பிரதமருக்கு, பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். பாகிஸ்தான் குழுவினர் இந்தியா வந்து ஆய்வு செய்தபின் பாகிஸ்தான் திரும்பி சென்றனர். இந்த தாக்குதலை இந்தியர்களே நடத்தியதாக அவர்கள் கூறினர். தீவிரவாதத்தின் மீது நடவடிக்கை எடுக்க கடந்த 2015ல் பாகிஸ்தானுக்கு கடைசி வாய்ப்பு அளிக்கப்பட்டது. அதை பாகிஸ்தான் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

மும்பை தீவிரவாத தாக்குதலில் 150 பேர் கொல்லப்பட்டனர். இதில் பங்கேற்ற தீவிரவாதிகள் ஒவ்வொரு நிமிடமும் பாகிஸ்தானிலிருந்து உத்தரவுகளை பெற்று செயல்பட்டனர். அமெரிக்காவில் நடைபெற்ற செப்டம்பர் 11 தீவிரதாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட ஒசாமா பின்லேடன் எங்கிருக்கிறார் என தங்களுக்கு தெரியாது என பாகிஸ்தான் கூறியது. ஆனால் அவர் பாகிஸ்தானில் ராணுவ கட்டுப்பாட்டில் உள்ள இடத்துக்கு அருகே பாதுகாப்பான இடத்தில் இருந்தார். அதை அமெரிக்கா கண்டுபிடித்து ‘ஆபரேசன் நெப்டியூன் ஸ்பியர்’ நடவடிக்கை மூலம் ஒசாமா பின்லேடனை சுட்டுக் கொன்றது. இதுதான் பாகிஸ்தான்.

அதனால்தான் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு இந்தியா தற்போது வித்தியாசமாக பதிலடி கொடுத்துள்ளது. கடந்த 7ம் தேதி பாகிஸ்தான் மற்றும் பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தினோம். பாகிஸ்தானின் நடவடிக்கை குறித்து நாங்கள் ஐ.நா.வில் புகார் தெரிவித்தோம். ஆனால், அதை பாகிஸ்தான் மறுத்தது. தீவிர விசாரணை நடத்தப்படவில்லை. தீவிரவாத கட்டமைப்பை ஒழிக்க எந்த முயற்சியையும் பாகிஸ்தான் எடுக்கவில்லை. தீவிரவாதிகளுக்கு தொடர்ந்து புகலிடம் அளித்து வந்தது. பாகிஸ்தான் இவ்வாறு செய்தால், ஆபரேஷன் சிந்தூர் போன்ற நடவடிக்கையைத்தான் சந்திக்க வேண்டியிருக்கும். இவ்வாறு சசிதரூர் கூறினார்.

# வாராணசியில் மந்திரங்கள் மூலம் சிகிச்சை: முதல் நாள் முகாமில் 42 நோயாளிகள் பங்கேற்பு

புதுடெல்லி, மே.27-

உத்தரப்பிரதேசம் வாராணசியில் மந்திரங்கள் மூலமாக சிகிச்சை அளிக்கப் படுகிறது. முதல்முறையாக மே 25ல் தொடங்கிய இந்த முகாமுக்கு முதல் நாளில் 42 நோயாளிகள் வந்திருந்தனர்.

மந்திரங்களின் சக்தியை மக்களிடம் பரப்புவதற்காக காசி எனும் வாராணசியில் முதன்முறையாக மந்திர சிகிச்சை தொடங்கப் பட்டுள்ளது. 21 நாள் மந்திர சிகிச்சை முகாமில், நோயாளிகளுக்கு 3,000 மந்திரங்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகின்றன.

அன்றாடம் தினசரி 3 மணி நேரம் 14 நிமிடங்களுக்கு இந்த சிகிச்சை நடைபெறுகிறது. முகாமில் உள்ள மந்திர நிபுணர்கள் நோயாளி களின் நோய்க்கு ஏற்ப



மந்திரங்களை ஓதி சிகிச்சை அளிக்கின்றனர்.

காலை 1.30 மணி நேரமும் மாலை 1.30 மணி நேரமும் தியானம், யோகா மற்றும் பிராணாய நாமத்துடன் மந்திர சிகிச்சை தொடங்கப்பட்டது. இந்த முகாமில் சிகிச்சை பெற முதல் நாளில் 42 நோயாளிகள் வந்தனர்.


இந்த முகாமை, வாரா ணசியின் ஷுத்திபூரிலுள்ள ரிஷிவ வேத ஆராய்ச்சி, யோகா மற்றும் இயற்கை மருத்துவ மையத்தில் துவக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் ஜைன மந்திரங்களும் ஓதி சிகிச்சைகள் குணப்ப டுத்தப்பட உள்ளன.

இதற்காக, பிஹாரின் புத்த மடாலயம் அமைந்த ராஜ்கீரின் ஜைன மந்திர நிபுணர் அம்ரிதேஷ் குமார் பாஸ்கர் வருகை புரிந்துள்ளார். இவர், நோய்களின் அதிவேகத் தன்மையைக் கட்டுப்படுத்த ஜைன மந்திரங்கள் மற்றும் ஆயுர்வேத மந்திரங்க ளையும் ஓதினார்.

இங்கு மந்திர சிகிச்சை ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட மூன்று குழந்தைகளுக்கும் அளிக்கப்பட்டன. இவர்களுக்காக, நெருப்பு மற்றும் வீனஸ் மந்திரங்கள் ஓதப்பட்டன.

இது குறித்து மந்திர நிபுணர்கள் கூறுகையில், ‘இந்த மந்திரங்கள் மூலம், எதிர்மறை சிந்தனை மற்றும் கடந்த காலத்தில் வாழ்ந்தவர்களின் சிந்தனையை சரியான திசையில் கொண்டு வர முடியும். யோகா, தியானம் மற்றும் பிராணயாமத்துடன், மந்திர சிகிச்சை தினமும் செய்யப்படும்.

வெவ்வேறு நோய்களுக்கு மூவாயிரம் மந்திரங்கள் தயாரிக்க ப்பட்டுள்ளன. நோயா ளிகளுக்கு அவர்களின் நோய்க்கு ஏற்ப மந்திர சிகிச்சை அளிக்கப்படும். மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த மந்திரங்கள் அனைத்தும் பிராகிருத மொழியில் இருப்பவை.’ எனத் தெரி வித்தார். நோயாளிகளின் நோய்க்கு ஏற்ப மந்திர நிபுணர்கள் சிகிச்சை க்கான மந்திர ங்களை ஓதுகிறார்கள். இவற்றை நோயாளி 30 நிமிடங்கள் தியான நிலையில் மந்திரங் களைக் கேட்க வேண்டும் என அறிவுறத்தப்படுகிறது. இதற்குப் பிறகு, ஒவ்வொரு நோயாளி யிடமும் ஐந்து நிமிடங்கள் மந்திரங்களைச் சொல்லக் கூறப்படுகிறது. பின்னர் அவர்கள் தியானிக்கச் சொல்லப்படுகிறார்கள்.



■ இராமநாதபுரம் மாவட்டம் செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர் பாண்டி இல்ல திருமண விழா சிவகங்கை மாவட்டம் சோழபுரத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு இராமநாதபுரம் மாவட்டம் ஆட்சியர் சிம்ரன் ஜீத் கலோன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மேலும் தங்களது இல்ல விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் வந்ததை செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலரின் குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைந்தனர்.மாவட்ட ஆட்சியருக்கு குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.





# அவலாஞ்சியில் 353 மி.மீட்டர் மழை பதிவு: கடும் குளிரும் நிலவுவதால் மக்கள் அவதி

ஊட்டி, மே.27-

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக அவலாஞ்சியில் 353 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. மழை தொடர்வதால் சுற்றுலா தலங்கள் இன்றும் மூடப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக சூறாவளி காற்றுடன் மழை பெய்து வருகிறது. இந்நிலையில், இன்றும் (திங்கட்கிழமை) நீலகிரி மாவட்டத்தில் அதி கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதி கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள தொட்டபெட்டா காட்சி முனை, பைன்பாரஸ்ட், அவலாஞ்சி, பைக்காரா உள்ளிட்ட சுற்றுலா தலங்கள் முன்கூட்டியே மூடப்பட்டன. இதனால் ஏற்கெனவே அறை முன் பதிவு செய்து வந்திருந்த சுற்றுலா பயணிகள், சுற்றுலா தலங் களுக்கு செல்ல முடியாமல் தங்கும் விடுதிகளில் இருந்தனர்.

அதி கனமழை காரணமாக நீலகிரி மாவட்டத்தில் இன்றும் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள், ஊட்டி படகு இல்லம் மூடப்படுவதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்து உள்ளது. மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக அவலாஞ்சியில் 353 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மழைக்கு ஊட்டி, குன்னூர், கூடலூர், பந்தலூர் பகுதிகளில் ஆங்காங்கே மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தீயணைப்பு மீட்பு குழு, நெடுஞ்சாலைத் துறையினர் உடனுக்குடன் அகற்றி வருகின்றனர். மரங்கள் மின்கம்பிகள் மீது விழுவதால் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. இதன் காரணமாக குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலை துறைக்கு சொந்தமான, ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, டீ பார்க், மரவியல் பூங்காக்கள் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு கருதி இன்றும் மூடப்பட்டுள்ளன. வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சூழல் சுற்றுலா மையங்களும் மூடப்பட்டுள்ளன. ஓயாமல் கன மழை பெய்து வருவதால் கடும் குளிர் நிலவுகிறது. சுற்றுலா பயணிகள் தங்கள் சொந்த ஊருக்கு திரும்பி வருகின்றனர்.

கடந்த 24 மணி நேரத்தில், நீலகிரி மாவட்டத்தில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில்: அப்பர் பவானி 298, எமரால்டு 182, கூடலூர் 153, சேரங்கோடு 139, பந்தலூர் 137, குந்தா 115, பாடந்தொரை 105, கிளன்மார்கன் 105, செருமுள்ளி 101, ஓவேலி 89, நடுவட்டம் 80, கிண்ணக்கொரை 72, ஊட்டி 71.1, தேவாலா 63, கெத்தை 45, மசினகுடி 36, பர்லியாறு 35, கோடநாடு 32, குன்னூர் 30, கல்லட்டி 20, கோத்தகிரி 16, கீழ் கோத்தகிரி 8.

# சென்னையில் கடல் உணவு ஏற்றுமதியை பெருக்கும் வகையில் 'பாரத் கடல் உணவு கண்காட்சி'

சென்னை, மே.27-

கடல் உணவு ஏற்றுமதியை பெருக்கவும் மற்றும் மீன்வளர்ப்பில் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் வகையில், சென்னையில் வரும் ஜூலை 1 முதல் 3ம் தேதி வரை 'பாரத் கடல் உணவு கண்காட்சி' நடத்தப்பட உள்ளது' என, கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.



இதுகுறித்து, கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணைய அதிகாரிகள் கூறியதாவது: "இந்தியாவில் கடல் உணவு ஏற்றுமதியை பெருக்கவும், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மீன்வளர்ப்பில் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் வகையில், சென்னையில் வரும் ஜூலை 1 முதல் 3ம் தேதி வரை 'பாரத் கடல் உணவு கண்காட்சி' நடத்தப்பட உள்ளது.

கடல் உணவு ஏற்றுமதி யாளர்கள், இறக்குமதியாளர்கள், விவசாயிகள், உபகரண உற்பத்தியாளர்கள் மற்றும் இத்தொழில் சார்ந்த பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதுடன், அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்துறை கண்டுபிடிப்புகளை பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்புகளை இக்கண் காட்சி ஏற்படுத்தி தரும்.

மேலும், அனைத்து பங்குதாரர்களும் மீன்வளர்ப்பு மற்றும் கடல் உணவு துறையின் பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசித்து, வணிக ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும், இத்துறையின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்த புதுப்பிப்பையும் பெறுவதற்கு இக்கண்காட்சி வழி வகுக்கும்," என்று அவர்கள் தெரிவித்தனர்.



# கனமழை: கோவை அருகே சாலையில் மரம் விழுந்து போக்குவரத்து பாதிப்பு

மேட்டுப்பாளையம், மே.27-

கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் கடந்த இரு நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. குறிப்பாக, கோவையை அடுத்த மேட்டுப்பாளையம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதனிடையே, கனமழை காரணமாக மேட்டுப்பாளையம் கோத்தகிரி சாலையில், முதலாம் கொண்டை ஊசி வளைவு அருகே, சாலையோரம் இருந்த மரம் (மே 26) இன்று முறிந்து சாலையின் குறுக்கே விழுந்தது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற மேட்டுப்பாளையம் போலீஸார் மற்றும் தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்துக்குச் சென்று இயந்திரங்களை பயன்படுத்தி, சாலையின் குறுக்கே விழுந்த மரத்தை வெட்டி அகற்றி போக்குவரத்தை சரி செய்தனர்.

## மதுரை மாவட்டம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலமாக

# Agricultural Machinery Demonstrator பயிற்சி வழங்கப்படவுள்ளது: மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா தகவல்

மதுரை, மே.27-

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலமாக Agricultural Machinery Demonstrator பயிற்சி மதுரை மாவட்டம், நெல்லியேந்தல்பட்டி (விவசாய கல்லூரிக்கு) அருகில் உள்ள உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), அரசு இயந்திர கலப்பை பணிமனையில் நடத்திட சென்னை, தலைமைப்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் Agricultural Machinery Demonstrator பயிற்சி வகுப்பு 15 நபர்களுக்கு 16 நாட்கள் நடத்தப்படும். 2025-26ஆம் ஆண்டில் மொத்தம் 2 பயிற்சி வகுப்புகள் நடத்த அறிவுரை பெறப்பட்டுள்ளது. Agricultural Machinery Demonstrator முதல் பயிற்சி ஜூன் 2025ஆம் மாதத்தின் முதல் வாரத்தில் துவங்கப்பட உள்ளதால் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்வதற்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி 8ம் வகுப்பு தேர்ச்சி/தோல்வி அதற்குமேல் பயின்றவர்கள் மற்றும் வயதுவரம்பு 18 முதல் 35 வயது வரை உள்ள மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மட்டும் தங்களது கல்வித்தகுதி சான்று, ஆதார் அட்டை மற்றும் புகைப்படம் ஆகியவற்றை மதுரை மாவட்டம், நெல்லியேந்தல்பட்டி (விவசாய கல்லூரிக்கு) அருகில் உள்ள உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை), அரசு இயந்திர கலப்பை பணிமனைக்கு நேரில் சென்று தங்கள் பெயரினை பயிற்சிக்கு பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் கூடுதல் விபரங்களுக்கு 7904859997, 84289 81436 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தகவலினை பெற்றுக் கொள்ளலாம். பயிற்சி முடித்தபின் ஓட்டுநர் உரிமம் பெற ஆவண செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ. சங்கீதா தெரிவித்துள்ளார்.

# 55 கி.மீ வேகத்தில் சூறாவளி காற்று: ராமநாதபுரம் மீனவர்களுக்கு எச்சரிக்கை

ராமேசுவரம், மே.27-

மறு அறிவிப்பு வரும் வரை ராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் யாரும் கடலுக்குள் செல்ல வேண்டாம் என மீன்வளத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.



மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய, தென் தமிழக கடலோரப் பகுதிகள் பகுதிகள், குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே 55 கிலோ மீட்டர் வீசக்கூடும், மேலும் கடல் அலை 3 முதல் 3.5 மீட்டர் உயரத்தில் எழக் கூடும் என்பதால் இன்று (திங்கட்கிழமை) ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேசுவரம், பாம்பன், மண்டபம் நாட்டுப் படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல மீன்வளத் துறையினர் அனுமதி வழங்கவில்லை. மேலும், மறு அறிவிப்பு வரும் வரை நாட்டுப் படகு மீனவர்கள் யாரும் கடலுக்குள் செல்ல வேண்டாம் எனவும், தங்களது மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அனைத்தையும் பாதுகாப்பாக வைத்திடவும் மீன்வளத் துறையினர் அறிவுறுத்தி உள்ளனர். முன்னதாக, அரபிக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் ராமேசுவரம் அருகே பாம்பன் துறைமுகத்தில் 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## குட்கா, பான் மசாலா உள்ளிட்ட புகையிலை பொருளுக்கான தடையை ஓராண்டு நீட்டித்து தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை, மே.27-

குட்கா, பான் மசாலா உள்ளிட்ட புகையிலை பொருளுக்கான தடையை ஓராண்டு நீட்டித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006ன் படி, 2013ம் ஆண்டு மே 23ம் தேதி முதல் புகையிலை மற்றும் நிகோட்டினை சேர்மமாக கொண்ட உணவுப் பொருட்கள் மீதான தடையை அரசு அமுல்படுத்தியது. இந்த தடை ஆண்டுதோறும் நீட்டிக்கப்பட்டு வருகிறது. உணவு பாதுகாப்புத் துறையின் மூலம் புகையிலை மற்றும் நிகோடினை சேர்மமாக கொண்ட உணவு பொருட்களை தயாரித்தல், சேமித்து வைத்தல், விநியோகித்தல், வாகனங்களில் எடுத்து செல்லுதல், விற்பனை செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், குட்கா, புகையிலைப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை மே 23ஆம் தேதியோடு முடிவடைந்தது. இதையடுத்து தமிழகத்தில் குட்கா, பான் மசாலா, புகையிலை பொருள்களுக்கான தடை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து தமிழக உணவுப் பாதுகாப்புத் துறை உத்தரவிட்டுள்ளது. அதன்படி இப் புகையிலைப் பொருள்களுக்கான தடை 2025 மே 23 வரை தடை நீட்டிக்கப்பட்டுள்ளது.

# உதகை மலர்க்கண்காட்சியை இதுவரை 1.84 லட்சம் பேர் கண்டு களித்துள்ளதாக பூங்கா நிர்வாகம் அறிவிப்பு

நீலகிரி, மே.27-

உதகை மலர்க்கண் காட்சியை இதுவரை 1.84 லட்சம் பேர் கண்டு களித்துள்ளதாக பூங்கா நிர்வாகம் அறிவித்துள்ளது. 11 நாட்கள் நடைபெற்ற மலர்க்கண்காட்சி நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் 1.84 லட்சம் பேர் கண்டுகளித்துள்ளனர்.

நீலகிரி கோடை விடுமுறையையொட்டி நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்களில் சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர். சுற்றுலா பயணிகளை உற்சாகப் படுத்தும் வகையில் தமிழக அரசின் தோட்டக்கலை துறை சார்பில் 127வது மலர் கண்காட்சியை 15ம் தேதி தொடங்கியது. இந்த கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை மலர் கண்காட்சியை காண பொதுமக்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. கண்காட்சியில், பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் 40 ஆயிரம் வண்ண மலர் மாடங்கள் இடம் பெற்றுள்ளன.

மேலும், மலர் கண்காட்சியில் பல்வேறு வகையிலான மலர்கள் இடம்பெற்றன. இதை சுற்றுலா பயணிகள் கண்டுகளித்தனர். கடந்த 11 நாட்களாக நடைபெற்று வந்த மலர்க்கண்காட்சி நேற்றுடன் நிறைவடைந்தது. இந்நிலையில் மலர்க்கண்காட்சியை இதுவரை 1.84 லட்சம் பேர் கண்டு களித்துள்ளதாக பூங்கா நிர்வாகம் அறிவித்துள்ளது.

# யுபிஎஸ்சி முதல் நிலைத் தேர்வு: பழகிய பகுதிகள், பக்குவமான கேள்விகள்

சென்னை, மே.27-

குடிமைப் பணிக்கான (ஐஏஎஸ்) முதல் நிலைத் தேர்வு, வழக்கம் போல குறிப்பிட்ட நாளில், தேர்வர்களுக்கு அதீத சோதனை / இடையூறு இல்லாமல், திட்டப்படி சரியாக நடந்து முடிந்துள்ளது. மத்திய தேர்வாணையத்தை மனதாரப் பாராட்டலாம்.

இனி.., முதல் நிலைத் தேர்வின் வினாத் தாளுக்குள் நுழைவோம். பொதுவாக எதிர்பார்த்த பகுதிகளில் இருந்து நேரடிக் கேள்விகள் அதிகம். ஒன்றே ஆண்டுகளில் இருந்து சில கேள்விகள், மாலையில் எளிமையான 'சீசாட்' தேர்வு.. 'பழகிய' தேர்வர்களுக்கு சாதகம் அதிகம். உண்மைத் தகவல்கள் அடிப்படையில் அமைந்த கேள்விகள் சற்றே கூடுதலாய் இருந்தன. முறையாகத் தயார் செய்து தேர்வு எழுதியவர்கள், நிச்சயம் மகிழலாம். சரியான வழிகாட்டுதல் கிடைக்கப் பெற்ற முதன்முறைத் தேர்வர்களும் அடுத்த நிலைக்கு இப்போதே தயாராகலாம்.

எப்போதும் போல, கேள்விகளில் நல்ல தரம்; 'நவீன கல்வி'க்குக் கணிசமான முக்கியத்துவம்; நடப்பு நிகழ்வுகளில் பொதுநல நோக்கு; சர்வதேசப் பார்வையை வலியுறுத்தும் புவிசார் வினாக்கள்... மீண்டும் ஒருமுறை, யுபிஎஸ்சி குடிமைப் பணித் தேர்வின் சிறப்பு மிக்க தனித்துவம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இவ்வாண்டும் சுற்றுச் சூழல், பூகோளம், பொருளாதாரம், உலக நடப்புகள், இந்திய சாசனம், இந்திய வரலாறு ஆகியன கேள்வித்தாள் முழுதையும் ஆக்கிரமித்து இருந்தன. ஆனாலும், ஆண்டுக்கு ஆண்டு 'பொது அறிவுத் தளம்' அகன்று விரிந்து நடப்புத் தேவைகளுக்கு ஏற்ப மாறி வருவதைப் புரிய வைக்கிறது.



சுற்றுச்சூழல் தொடர்பான பல கேள்விகள் சிந்திக்க வைக்கின்றன; பாதுகாப்புத் துறை தொடர்பான, குறிப்பாக 'போர் விமானம்' பற்றிய கேள்வி, இளைஞர்கள் தொடர்ந்து தமது அறிவாற்றலைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது.

தமிழகம் தொடர்பான மூன்று வினாக்கள் ஆச்சரியப்படுத்தின. 'சுயமரியாதை இயக்கத்தின் நிறுவனர் யார்?' என்கிற வினா தமிழ்த் தேர்வர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி!

மின் வண்டிகள், ஆளில்லா வானூர்திகள், மின்வண்டி 'பேட்டரி' கூறுகள், கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றம், செயற்கை மழை, எத்தனால் உற்பத்தி, 'வெட் பல்ப்' வெப்பநிலை... இதையெல்லாம் அறிந்துள்ள இன்றைய தேர்வர், ஒரு வகையில், சுற்றுச்சூழல் ஆர்வலர் / பாதுகாவலர் என்கிற அடைமொழிக்கு முற்றிலும் தகுதியானவர் என்றே தோன்றுகிறது.

புவியியல் சார்ந்த வினாக்களில் உலகளாவிய அணுகுமுறை புலப்படுகிறது. பூமத்திய ரேகையை ஒட்டிய ஏரிகள், 'கண்டம் தழுவிய மாற்றம்' (continental drift) பெட்ரோலில் மட்டும் இயற்கை வாயு கட்டுப்பாட்டு வாரியம், கடற்காற்று, வறண்ட காற்று குறித்த கேள்விகள் நம்மை மகிழ்விக்கின்றன.

வரலாறு பகுதி ரொம்ப சுமார். ஒத்துழையாமை இயக்கம், மகாத்மா காந்தியின் பிரச்சாரம்... எல்லாம், மற்ற பகுதிகளுடன் ஒப்பிடுகையில், மிகச் சாதாரணம். கடந்த சில ஆண்டுகளாக வரலாறு பகுதி கடினமாக இருந்தது; இவ்வாண்டு எளிமையாக இருக்கட்டுமே என்பதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டு இருக்கலாம்.

பொருளாதாரம் மிக நன்றாக 'கையாளப்பட்டு' உள்ளது. வெறுமனே தத்துவ ரீதியாக இல்லாமல், நடைமுறை சார்ந்த, சர்வதேச நிதி பொருளாதார அமைப்புகள், கொள்கைகள், திட்டங்கள் குறித்த கேள்விகள் தேர்வின் தரத்தை உயர்த்திப் பிடிக்கின்றன.

நிதிப் பற்றாக்குறை: வருவாய்ப் பற்றாக்குறை இடையிலான வேறுபாட்டை சோதிக்கும் இரண்டு கேள்விகள் நன்கு கட்டமைக்கப் பட்டுள்ளன.

மின் பணப் பரிமாற்றம், முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்தியாவின் 'யுபிஐ' வசதியை ஏற்றுக் கொண்டுள்ள நாடுகள், RTGS - NEFT இடையிலான வேறுபாடு, கல்வி தொடர்பான 15வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான சர்வதேச வங்கியின் செயல்பாடு, 'சர்குலர்' பொருளாதாரம் ... குறை சொல்ல முடியாத கேள்விகள்.சாசனத்துடன் தொடர்புபடுத்தி சில அரசியல் அரசியல் வினாக்கள், ஆங்காங்கே விறுவிறுப்பு கூட்டுகிறது. 'மசோதா அனுமதி' விஷயத்தில் குடியரசுத் தலைவரின் அதிகாரம், ஆளுநரின் விருப்பு, நீதிமன்ற நடவடிக்கைக்கு அப்பாற்பட்ட ஆளுநரின் செயல்பாடு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அவையில் நிகழ்த்தும் உரைகள், கட்சித்தாவல் தடை சட்டம், சபாநாயகரின் அதிகாரம், லோக்பால் அமைப்பு ஆகியன 'மரபுவழி' கேள்விகள். அதேசமயம், இடைநிலைப் பஞ்சாயத்துகளுக்கு மாநில அரசின் வரிப் பங்கீடு சாமர்த்தியமான (செமத்தியான) 'குத்தல்' கேள்வி.

சரி... வித்தியாசமான கேள்வி...?

'நேர மண்டலம்' தொடர்பானது.

கேள்விஇது சரியா? 'சைபீரியாவில் 'அனடிர்'; அலாஸ்காவில் 'நோமே'... இடையே தூரம், சில கிலோமீட்டர் மட்டுமே. ஆனால், இங்குள்ள மக்கள் காலையில் தூங்கி விழிக்கும் போது (இரண்டு இடங்களிலும்) இருவேறு நாட்களாக இருக்கும். அனடிரில் திங்கள் என்றால் நோமேவில் செவ்வாயாக இருக்கும்!





# திருமுருகன்பூண்டி கோவிலின் தீர்த்த கிணறு சுத்தம் செய்யப்பட்டது பக்தர்கள் மகிழ்ச்சி

திருப்பூர், மே.27-
திருப்பூர் மாவட்டம் அவிநாசி வட்டத்திற்குட்பட்ட பகுதியில், ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பழமை வாய்ந்த திருமுருகநாதர் கோவில் அமைந்திருக்கும் திருமுருகன்பூண்டி கோவிலில் மாவட்ட சுகாதார இயக்குனர் ஜெயந்தி அவர்கள் ஆய்வு மேற்கொண்டதிலிருந்து தூய்மை பணி பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மேலும் கோவில் வளாகத்தில் உள்ள தீர்த்த கிணறு மிகவும் அசுத்தம் அடைந்த நிலையில், கோவிலின் செயல் அதிகாரி விமலா அவர்கள் முன்னிலையில் சுத்தம் செய்யப்பட்டது. அவிநாசி வட்டார சுகாதார அலுவலர் அதனை மேற்பார்வையிட்டார். திருமுருகநாதரின் பக்தர்களும், பொதுமக்களும் மாவட்ட சுகாதாரத் துறைக்கும் கோவில் செயல் அதிகாரி அவர்களுக்கும் நன்றி தெரிவித்தனர்.

# மேலப்பசலை கிராமத்தில் கிருத்தவ ஆலயத்தில் வருடாந்திர விழா திரளானோர் பங்கேற்றனர்



மானாமதுரை, மே.27-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள மேலப்பசலை கிராமத்தில் தூய பரலோக இராக்கினி கிறித்தவ ஆலயம் உள்ளது. இங்கு வருடம் தோறும் வருடாந்திர ஆண்டு விழா நடைபெறுவது வழக்கமாகும். 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர விழாவை முன்னிட்டு சர்ச் வளாகத்தில் சிறப்பு திருப்பலி மற்றும் கூட்டு திருப்பலி பங்குத் தந்தை ஜெ.ஜெ. அலக்ஸ் தலைமையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து பூக்களால் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் மாதாவின் சொரூபம் வைக்கப்பட்டது. கோயில் அருகே உள்ள 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த மணி ஒலிக்கப்பட்ட பின்னர் மின் அலங்கார தேர் மேலப்பசலை கிராமத்தில் உள்ள தெருக்களின் வழியாக வீதி உலா வந்தது. மேலப்பசலை மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதிகளை சேர்ந்த பங்கு இறை மக்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை சென்னை தொழிலதிபர் இருதயராஜன் மற்றும் மேலப்பசலை பங்கு இறைமக்கள் செய்திருந்தனர்.பின்னர் அன்னதானம் வழங்கப்பட்டது.சிறுவர் சிறுமியின் கலை நிகழ்ச்சிகள் அரங்கேறியது..



■ சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் அஇஅதிமுக மாவட்ட செயலாளர் செந்தில்நாதன் , சமுதாய பற்றாளர்கள் பானுமதி மற்றும் அஇஅதிமுக முக்கிய பிரமுகர்கள் மற்றும் உறவுகள் அனைவருக்கும் மருதுசேனை தலைவர் கரு.ஆதிநாரயணன் இல்ல விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் மருது சேனை நிர்வாகிகள் உடனிருந்தனர்.



வேலூரில், பஜாஜ் சி.என்.ஜி மூன்று சக்கர ஆட்டோ அறிமுகம்

# சி.என்.ஜி-யில் 45km முதல் 50km வரை கூடுதல் மைலேஜ் ஆட்டோ அறிமுகம்

சிறப்பு சலுகையில் எக்ஸ்சேஞ்ச் ஆபர் மற்றும் சிறப்பு சலுகை விலையில் ஆட்டோ விற்பனை

வேலூர், மே.27-
வேலூர் மாவட்டம், வேலூர், தோட்டப்பாளையம், சி.என்.ஜி ஆட்டோ அறிமுக விழா, நறுவி மருத்து வமனை அருகே, பெருமுகையில் பஜாஜ் ஆட்டோ மொபைல்ஸ் திறக்கப்பட்டுள்ளது. இங்கே எக்ஸ்சேஞ்ச் மேளாவில் ஆட்டோவை பெற்றுக்கொள்ளலாம். சி.என்.ஜி. மாடலுக்கு மெகா ஆஃபர் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் சிறந்த மைலேஜ், மிகக் குறைந்த பராமரிப்பு மற்றும் வங்கி மூலமாக லோன் வசதியும் செய்து தரப்படும் என தெரிவித்துள்ளனர். அதேபோல் ஒவ்வொரு எக்சேஞ்ச் ஆட்டோ விற்கும் ரூபாய் 15 ஆயிரம் சிறப்பு தள்ளுபடி சலுகையும் செய்து தரப்படும் என தெரிவித்தனர். இந்த அறிமுக விழா வேலூர் சத்துவாச்சாரி சாலை நறுவி மருத்துவமனை அருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில், வேலூர் கிளை மேலாளர் ஜெகன் அண்ட் ஆம்பூர் கிளை மேலாளர் ஆர்.கோபி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரவீன், தீபக் சேல்ஸ் எக்ஸ்யூடிவ் ஆகியோர் உடனிருந்தனர். இந்நிகழ்ச்சியின் போது ஆட்டோ ஸ்டாண்ட் சங்க தலைவர் பாலு தலைமையில் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் என பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

## வேலூரில், அனைத்திந்திய முதலியார் பிள்ளைமார் சங்கம் சார்பில் மணமாலை சந்திப்பு நிகழ்ச்சி



■ வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த திருமலைக்கோடி, நாராயணி மஹாலில் அனைத்திந்திய முதலியார் பிள்ளைமார் சங்கம் சார்பில் மணமாலை விழா, சங்கத் தலைவர் ராம்குமார் முதலியார், சங்க செயலாளர் முருகேசன் முதலியார், பொருளாளர் செந்தில்குமார் முதலியார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.





# ஆம்பூர் அருகே அரசு பேருந்து மீது தோல் ஏற்றி வந்த லாரி மோதி விபத்து: சுக்குநூறான அரசு பேருந்து

வாணியம்பாடி, மே.27-
திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூரில் இருந்து 30க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு அரசு பேருந்து பேரணாம்பட்டு நோக்கி சென்று கொண்டு இருந்தது. அப்போது பேர்ணாம்பட்டில் இருந்து தோல் ஏற்றி கொண்டு ஆம்பூர் நோக்கி வந்த லாரி அரசு பேருந்து மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் அரசு பேருந்து ஓட்டுனர் ராஜா, நடத்துணர் குணசேகரன், லாரி ஓட்டுநர் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த உபேஷ் மற்றும் பேருந்தில் பயணம் செய்த காலனி தொழிற்சாலை தொழிலாளர்கள் முஹம்மத் ஆசிப், மகாலிங்கம், ராதிகா, ரீனா ரோஜா, பிரியா, ரஞ்சனி, சசிகலா, ஜெய்ஸ்ரீ, தீபா, இளமதி, ஜெயக்கொடி, சாதியா உட்பட 15க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். படுகாயம் அடைந்தவர்களை அப்பகுதி மக்கள் மீட்டு சிகிச்சைக்காக ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். லாரி ஓட்டுநர் உபேஷ் மற்றும் பெண் தொழிலாளர்கள் ரஞ்சனி, சசிகலா உட்பட மூன்று பேர் மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.


மேலும், அரசு பேருந்தில் பயணம் செய்த 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் விபத்து நடக்கும் முன் பேருந்து நிறுத்தத்தில் இறங்கியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

தகவலறிந்த ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று படுகாயம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறினார், மேலும் உரிய சிகிச்சை அளிக்க மருத்துவர்களிடம் கேட்டுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

விபத்து குறித்து உமராபாத் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்து காரணமாக ஆம்பூர் பேர்ணாம்பட்டு சாலையில் சுமார் அரை மணி நேரத்துக்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.





■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 09/05/2025 அன்று திறந்து வைத்த திருச்சிராப்பள்ளி மாவட்டம் பஞ்சப்பூர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தின் பல்வேறு பகுதிகளில் செய்யப்பட்டுள்ள சிறப்பு வசதிகள் முதல் தளத்தில் நகரப் பேருந்துகள் வந்து செல்ல செய்யப்பட்டுள்ள வசதிகள் ஆகியவற்றை தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் உடன் நகராட்சி நிர்வாகம் துறை அமைச்சர் கே.என்.நேரு , இயற்கை வளங்கள் துறை அமைச்சர் ரகுபதி, கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன்,பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அன்பழகன், மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையர் சரவணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் செல்வப் பெருந்தகை பேட்டி



■ இந்தியா கூட்டணி எஃகு கோட்டை போல் உறுதியாக உள்ளது. இது தமிழக மக்களுக்கான கூட்டணி. இந்தியா கூட்டணியில் பிளவு ஏற்பட வேண்டும் என சிலர் கனவு காண்கிறார்கள் அந்த கனவு ஒருபோதும் பலிக்காது என்றார்..

# சிவகங்கையில் மின் பயனீட்டாளர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்


சிவகங்கை, மே.27-
சிவகங்கை மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் ரெஜினா குமாரி தலைமையில் மின் பயனீட்டாளர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (27/05/2025) அன்று காலை 11.00 மணி முதல் 01.00 மணி வரை செயற்பொறியாளர்/பகிர்மானம் காரைக்குடி கோட்டத்தில் நடைபெறுவதால் காரைக்குடி கோட்டத்திற்குட்பட்ட மின் பயனீட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களின் மின்வாரியம் சம்மந்தமான குறைகளை தெரிவித்து செய்து கொள்ளுமாறு காரைக்குடி மின் செயற்பொறியாளர் லதா தேவி தகவல் தெரிவித்துள்ளார்.



# வேலூரில் மாநகராட்சி சார்பில் குப்பை எரிக்கும் இன்சினேட்டர் இயந்திரம் அமைக்கும் பணியை ஆய்வு செய்த ஆட்சியர்

வேலூர், மே.27-
வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட1வது மண்டலத்தில் நாள் ஒன்றுக்கு 25 டன் குப்பையை எரிக்கும் இன்சினேட்டர் இயந்திரம் அமைக்கும் பணியை வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி ஆணையர் ஜானகி, உதவி செயற்பொறியாளர் சந்திரசேகர், மாநகர சுகாதார அலுவலர் பிரதாப், மண்டல சுகாதார அலுவலர் சிவக்குமார் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# தேவகோட்டை ராம்நகரில் ஸ்ரீ பாலமுருகன் கார்த்திகையை சிறப்பு அபிஷேகம் புகைப்படங்கள்



சிவகங்கை, மே.27-
சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ராம்நகரில் ஸ்ரீ பாலமுருகன் கோவில் உள்ளது. நேற்று கார்த்திகையை சிறப்பு அபிஷேக் ஆராதனைகள் நடைபெற்றது. முன்னதாக விநாயகரருக்கு சிறப்பு அபிஷேகம் செய்தனர். பின்னர் ஸ்ரீ பாலமுருகனுக்கு மஞ்சள், சந்தனம், பால், தயிர், தேன், பஞ்சாமிர்தம், இளநீர், பன்னீர்திருநீர், 11 வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது. அபிஷேகங்களுக்கு பின்னர் முருகனுக்கு சிறப்பு அலங்காரம் செய்திருந்தனர். பக்தர்கள் பக்தர்கள் சஷ்டி கவசம் பாடினர். திரளான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று சாமி தரிசனம் செய்தனர்.





# வேலூர் மாநகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆய்வு கூட்டம்

மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் ஆகியோர் பங்கேற்பு

வேலூர், மே.27-
வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வேலூர் மாநகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மற்றும் சட்டத்துறை நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் ஆகியோர் தலைமையில் நடை பெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு, துணை மேயர் மா.சுனில்குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜானகி, துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161